(4) பொது நலவரசு உதவி திட்டத்தின் கீழ் பிரித்தானிய அரசாங்கத்திடமிருந்து 25 இலட்சம் பவுன் (ஏறக்குறைய 330 இலட்சம் ரூபாய்கள்) கடன் பெறுவதற்காக நடாத்தப்பட்ட பேச்சு வார்த்தைகள் முடிவாக்கப்பட்டன. இலங்கைத் தொலைபேசி முறையை புனருத்தாரணம் செய்யத் தேவையான சாதனங்களை வாங்குவதற்காக இக்கடன் உடன்படிக்கை முடிவாக்கப்பட்டது. பிரித்தானிய அரசாங்கம் எந்த வட்டி வீதத்தில் கடன் பெற முடியுமோ அதே வட்டி வீதம், இக்கடனுக்கும் விதிக்கப்பட்டது. அத்துடன் காற்சதவீத முகாமை வரியையும் இக்கடன் கொண்டுள்ளது. மேற்படி சாதனங்கள் ஒப்படைக்கப்பட்ட ஐந்து ஆண்டுக் காலத்திற்குள், தவணைப் பணங்களாகக் கொடுத்து இக்கடன் தீர்க்கப்படல் வேண்டும்.

**சர்வதேசப்பண மாற்றங்கள்:** 1959ம் ஆண்டு சர்வதேசப் பண நிதியில் இலங்கையின் அனுமதிப்பங்கு, 300 இலட்சம் டொலர்களால் அதிகரிக்கப்பட்டது. இதில் 25 சதவீதம் தங்கத்தில் கொடுக்கப்பட்டது. இவ்வதிகரிப்பு 1959ம் ஆண்டு புரட்டாதி மாதம் நடைமுறைக்கு வந்தது. இப்பொழுது இலங்கையின் அனுமதிப்பங்கு 450 இலட்சம் டொலர்களாகும். இலங்கை சம்பந்தப்பட்டவகையில் இவ்வதிகரித்த அனுமதிப்பங்கின் முக்கியத்துவம், எங்கள் சென்மதி நிலுவையின் ஏற்றத் தாழ்வுகளின் பயனாக ஏற்படக்கூடிய கொடுப்பனவு இடர்ப்பாடுகளை நிவர்த்திப்பதற்கு இது ஓர் கூடுதலான ஒதுக்குநிதியை ஏற்படுத்துகின்றதென்பதேயாகும்.

சர்வதேச அரங்கில், அனுமதிப்பங்குகளின் மேல்வாரியான அதிகரிப்பு, கூடிய செயலாற்ற இணக்கத்தைக் கொண்டு வரும். அத்துடன் சாதாரணப்பற்றுக்களை விரித்து அங்கத்தினர்களுக்கு ஆதரவைத் திடமாக அளிப்பதோடு, இந்நிதிக்கு மேலதிகமான தங்க ஒதுக்கல்களையும் உண்டாக்கும். இதனால் விளையும் சர்வதேச கைம்மேற்பணம் பெறும் தன்மையின் அதிகரிப்பு, அங்கத்துவ நாடுகளின் சிக்கலான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஓர் வரவேற்கத்தக்க விடயமாகி, சர்வதேசப் பொருளாதார இயக்கத்தை தொடர்ந்து பேணும்.

சர்வதேசப் பணநிதியில் இலங்கையின் அனுமதிப்பங்கு அதிகரிக்கப்பட்டதற்கிசைய 'சர்வதேச புனருத்தாரண அபிவிருத்தி வங்கிக்கு' இலங்கையின் ஒப்பப்பணம் 600 இலட்சம் டொலர்களுக்கு உயர்ந்தப்பட்டது.

## IV. மகா வங்கியின் கணக்குகளும் இயக்கங்களும்.

மகா வங்கியின் 1959ம் ஆண்டுக்குரிய நிதிக்கணக்குகள் பின்னிணைப்புப் பகுதியிலுள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன. 958ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் பிரதான மாற்றங்கள் பின்வருமாறு:–

| | மாற்றம் | |
|---|---|---|
| | இலட்சம் ரூபாய்களில் | சதவீதம் |
| மொத்தக் கேள்விப் பொறுப்புக்கள் .. .. .. | + 732 | + 10·0 |
| நாணயச் சுற்றோட்டம் .. .. .. .. | + 430 | + 7·4 |
| கேள்வி வைப்புகள் .. .. .. .. | + 303 | + 20·0 |
| இதில் வர்த்தக வங்கிகள் .. .. .. .. | + 39 | + 4·3 |
| சர்வதேச ஒதுக்கு நிதி .. .. .. .. | —1520 | — 28·2 |
| உள்நாட்டுச் சொத்து .. .. .. .. | +2528 | + 96·9 |
| அரசாங்க, அரசாங்க உத்தரவாதமுள்ள பிணைப் பத்திரங்கள் .. | +1910 | +124·5 |

\+ அதிகரிப்பு

—குறைவு

**1958**ம் ஆண்டு முடிவில், நாணய கேள்விப் பொறுப்புகளில், **73.8** சதவீதமாக விருந்த சர்வதேச ஒதுக்கு நிதியின் விகிதம், **1959**ம் ஆண்டு முடிவில் **48.2** சதவீத மாகக் குறைந்தது.

காலத்திற்கு காலம், ஸ்டேர்லிங், டொலர் இரண்டிற்கும் இடையே உள்ள மாற்று விகித மாறுபாடுகளுக்கு இயைய, அமெரிக்க டொலர்களுக்கு மகா வங்கியின் விகிதம் மாற்றப்பட்டது.

**வருமானமும் செலவும்:** இவ்வாண்டு, மகா வங்கியின் வருமானம் ரூ. **2,05,644, 703-30** சதம் ஆகும். நாணய விதி அதிகாரச் சட்டத்தின் **38**ம் பகுதிக் கேற்ப, ஒதுக்கு நிதிக்குச் செலுத்தப்பட்ட தொகையான ரூ. **82,15,879-78** சதத்தையும் சேர்த்த செலவு, ரூ. **1,55,64,703-30** சதமாகும். **1959**ம் ஆண்டு மார்கழி மாத முடிவில் வங்கியின் மொத்தச் சொத்துகளுக்கும், அந்நிய நாணயத்தில் உள்ள வங்கியின் சொத்துகளுக்கும் இடையே உள்ள வித்தியாசத்தின் **15** சதவீதத்திலும் பார்க்க, வங்கியின் மூலதனத் தொகை குறைவாக இருந்தமையால், தேறிய இலாபமான **50** இலட்சம் ரூபாய்கள், நாணய விதி அதிகாரச் சட்டத்தின், **39 (b)** பகுதிக் கேற்ப மூலதன உபரிக்கு வரவு வைக்கப்பட்டது. மூலதன உபரி இப்பொழுது **230** இலட்சம் ரூபாய்களாக இருக்கின்றது.

## V. ஆளணி

**1959**ம் ஆண்டு ஆடி மாதம் முதலாம் திகதியன்று சேர். ஆர்தர் ரணசிங்க, மகா வங்கியின் ஆட்சியாளர் பதவியை விட்டு நீங்கினர். அத்திகதி முதல் திரு. டீ. டபிளியூ ராஜபத்திரன அப்பதவிக்கு நியமிக்கப்பட்டார். நாணயச் சபையின் நியமன அங்கத்தினரான திரு. ஜே. தியாகராஜா மீண்டும் அப்பதவிக்கு நியமனம் செய்யப்பட்டார். **1959**ம் ஆண்டு **28**ம் திகதி முதல் பங்குனி **9**ம் திகதிவரை திரு. டி. டபிளியூ. ராஜபத்திரன, சிரேட்ட உப ஆட்சியாளராக இருந்த காலத்தில் உத்தியோக அலுவலாக புதுடில்லிக்குச் சென்றிருந்த போது திரு. டபிளியூ. தென்னக்கோன், சிரேட்ட உப ஆட்சியாளராக்கப்பட்டார். மகா வங்கி ஆலோசகராக இருந்த திரு. ஜி. பி. பென்னட், **1959**ம் ஆண்டு வைகாசி மாதம் முதலாம் திகதி வங்கியை விட்டு நீங்கினர்.

ஆட்சியாளர்களுக்கு உதவியாளராகவிருந்த திரு. பி. எம். ஜெயராஜன் சர்வதேசப் பண நிதியில் மாற்று நிர்வாக இயக்குநராக, **1959**ம் ஆண்டு கார்த்திகை மாதம் முதல், **1960** ஆண்டு ஐப்பசி மாதம் வரை, கடமையாற்றுவதற்காக அனுமதிக்கப்பட்டார். 'சர்வதேச புனருத்தாரண அபிவிருத்தி வங்கியின்' மாற்று நிர்வாக இயக்குநராகக் கடமையாற்றிய திரு. டி. சி. குணசேகர, **1959**ம் ஆண்டு ஐப்பசி மாதத்தில் அதை விட்டு நீங்கினர். **1959**ம் ஆண்டு கார்த்திகை மாதம் **23**ம் திகதி முதல் அவர் மகா வங்கியில் ஆட்சியாளர்களுக்கு உதவியாளராக நியமிக்கப்பட்டார்.